TAMIL NADU OPEN UNIVER
CHENNAI-15.
24 APR 2017
REGISTRAR OFFICE

**சுருக்கம்**

உயர்கல்வித்துறை – உயர்கல்வித் துறையின் கீழ் செயல்படும் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் தொலைநிலை கல்விமுறை படிப்புகளுக்கு ஒரே வகையான தரமான பாடத்திட்டங்களை தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்குதல்– வழிகாட்டு நெறிமுறைகள் – வெளியிடப்படுகிறது.

---

உயர்கல்வி (கே1)துறை

அரசாணை (நிலை) எண்.70

நாள் 17.04.2017
திருவள்ளுவராண்டு, 2048,
ஹேவிளம்பி, சித்திரை 4,

படிக்க:–

சென்னை, தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழக பதிவாளரின் கடித எண்.கோ.த.தி.ப.க./ தமிழக அரசு–68/ந.எண். 3560/2016/390, நாள் 18.10.2016.

---

ஆணை:–

மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 9.8.2016 அன்று 2016–17 ஆம் ஆண்டிற்கான உயர்கல்வித்துறை மானியக் கோரிக்கையின்போது, சட்டமன்ற பேரவையில் மற்றவைகளுக்கிடையே பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

> “தற்போது உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள பல்கலைக்கழகங்கள் வழங்கும் தொலைநிலைக் கல்விமுறைப் படிப்புகளுக்கு பல்வேறு வகையான பாடத்திட்டங்கள் பின்பற்றப்படுகின்றன. இதனால் வேலைவாய்ப்புகளில் கல்வித் தகுதி தொடர்பாக பாடப்பிரிவுகளின் சமநிலை குறித்து கேள்விகள் எழுப்பப்பட்டு, மாணவர்கள் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். இதற்குத் தீர்வு காணும்பொருட்டு, உயர்கல்வித் துறையின்கீழ் செயல்படும் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் தொலைநிலைக் கல்வி முறை படிப்புகளுக்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் ரூ.5 கோடி செலவில் ஒரே வகையான தரமான பாடத்திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஆவன செய்யப்படும்.”

2) மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பதிவாளர், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் அவர்களால் உயர்கல்வித் துறையின்கீழ் செயல்படும் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் தொலைநிலை கல்விமுறை படிப்புகளுக்கு, ஒரே வகையான தரமான பாடத்திட்டங்களை ரூ.5.00 கோடி செலவில், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்குவதற்கு பின்வரும் வழிகாட்டு நெறிமுறைகளுக்கு அரசின் ஒப்புதலை கோரியுள்ளார்:–

i. தமிழ்நாடு உயர்கல்வித்துறையின் அரசுச் செயலர் அவர்களின் தலைமையில், தமிழ்நாட்டில் தொலைநிலைக் கல்வியை வழங்கிவரும் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் அப்பல்கலைக்கழகங்களின் தொலைநிலைக் கல்வி இயக்குநர்கள், தமிழ்நாடு கல்லூரிக் கல்வி இயக்குநர், தமிழ்நாடு உயர்கல்வி மன்றம் ஆகியோர் பங்குபெறும் வகையில் ஒரு உயர்மட்ட குழு அமைத்து தமிழ்நாட்டில்

தொலைநிலைக் கல்விக்கான ஒரு பொது ஒழுங்காற்று அமைப்பை உருவாக்கும் திட்டத்தை செயல்படுத்துதல்.

ii. ஒவ்வொரு பாடத்திற்குமான பாடப்பொருள் குழுவை உருவாக்கும் நோக்கில் தொலைநிலைக் கல்வியை வழங்கிவரும் அனைத்துப் பல்கலைக்கழங்களின் சார்பாக ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு மூத்த பேராசிரியரை பரிந்துரைக்க கோருதல். ஒவ்வொரு குழுவும் அக்குழுவால் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மூத்த பேராசிரியரின் தலைமையில் செயல்படும். இக்குழுவில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் துறைசார்ந்த மூத்த பேராசிரியர் ஒருவர் நெறியாளராக செயல்படுவார். இப்பாடப்பொருள் குழுக்களின் பொறுப்புகள் கீழ்வருமாறு:–

- தற்போது, தமிழகத்தில் தொலைநிலை முறையில் வழங்கப்பட்டு வரும் பாடத்திட்டங்கள் மற்றும் நெறிமுறைகளைப் பெறுதல் மற்றும் ஆலோசித்தல்.
- தற்போது நடைமுறையில் உள்ள பாடத்திட்டங்களின் சிறப்பு உட்கூறுகளை, அடையாளம் காணப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தல்.
- சமகாலத்திற்கான புதுமைகளுடன், எதிர் காலத்திற்கும் பொருந்தும் வகையில் புதிய கூறுகளுடன் கூடிய பாடத்திட்டங்களை உருவாக்குதல்.
- படித்தல், ஒப்படைப்புகள் எழுதுதல், செய்முறை பயிற்சி, நேரடிக் கலந்தாய்வு வகுப்புகள், திறந்தநிலைக் கற்றல் வளங்களைப் பயன்படுத்துதல், SWAYAM உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு செலவிடும் நேரத்தின் அடிப்படையில் (பட்டம், பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்புகள் வழங்குவதற்கான) கற்றல் அளவெண்களை நிர்ணயித்தல்.
- கூடுதல் படிப்புகள் வழங்குவதற்கான ஆலோசனைகளை வழங்குதல்.
- கூடுதல் படிப்புகளுக்கான (Add on Courses) கற்றல் அளவெண்களைத் தீர்மானித்தல் மற்றும் பிற.
- தெரிவு அடிப்படையிலான கற்றல் அளவெண் முறைக்கான (CBCS) பொருத்தப்பாடுடைய பாடங்களை கண்டறிய ஆலோசனை வழங்குதல்.
- பொதுக் கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குரிய ஒப்புதலை அந்தந்தப் பல்கலைக்கழகங்களிலிருந்து பெறுவதற்கான வழிமுறைகளை ஆராய்தல்.
- பொதுப் பாடத்திட்டங்கள்/கலைத்திட்டங்களை படிமக்கோப்பு (PDF) வடிவில் அந்தந்தப் பல்கலைக்கழங்களின் வலைத்தளங்களில் பதிவேற்றம் செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குதல்.

iii. தமிழ்நாட்டில் தொலைநிலைக் கற்றலுக்கான பொதுப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஒரு நிலைக்குழுவை தமிழ்நாடு அரசு உயர்கல்வித்துறை செயலர் தலைமையில் அமைத்தல்: இக்குழுவின் உறுப்பினர்–செயலராக தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்களும், பிற பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் உறுப்பினர்களாகவும் செயல்படுவர். இந்த நிலைக்குழு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மற்றும் ஜுலை மாதம் கூடி எதிர்கால செயல்பாடுகள் குறித்து ஆராயும்.

iv. தொலைநிலைக் கற்றலுக்கான ஒழுங்காற்று அமைப்பு குறித்து 'பயிற்சியாளர்களுக்கான பயிற்சி' (TOT) என்ற பொருளில் 3 நாள் பயிற்சி வகுப்புக்கு ஏற்பாடு செய்தல். இப்பயிற்சி வகுப்பில் கருத்தாளர்களாக தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் கலந்து கொள்வார்கள். தேவை அடிப்படையில் பிற வல்லுநர்களும் கலந்துகொள்வர். இப்பயிற்சி வகுப்பில் தமிழ்நாட்டின் பிற பல்கலைக்கழகங்களிலிருந்தும் ஆசிரியர்கள் கலந்துகொள்வார்கள். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலிருந்தும் ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு வல்லுநர் கட்டாயம் கலந்துகொள்ளவேண்டும்.

v. தொலைநிலைக் கற்றலுக்கான ஒழுங்காற்று அமைப்பு குறித்து இரண்டு நாள் பயிற்சிப்பட்டறையை ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் நடத்துதல். இப்பயிற்சிப் பட்டறையின் ஆலோசகராக தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் செயல்படுவார். மேலும், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தில், 'பயிற்சியாளர்களுக்கான பயிற்சி' (TOT) பெற்ற அந்தந்தப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கருத்தாளராகச் செயல்படுவார்.

vi. பல்கலைக்கழகத்தின் மூத்த பேராசிரியரின் தலைமையில் ஒரு ஒழுங்காற்று வடிவமைப்புக் குழு நிறுவுதல்; இக்குழுவில் உறுப்பினர்களாக, அந்தந்தப் பல்கலைக்கழகத்தின் கலைத்திட்ட மேம்பாட்டுப்பிரிவின் இயக்குநர் அல்லது அதற்கு இணையான தகுதியுடைய அப்பல்கலைக்கழகத்தால் பரிந்துரை செய்யப்பட்ட ஒருவர் உறுப்பினராக செயல்படுவார். இந்த உறுப்பினர்கள், தொலைநிலைக் கற்றலுக்கான பொதுப் பாடத்திட்டங்களை வடிவமைக்கும் பணிகளை மேற்கொள்வார்கள்.

vii. ஒவ்வொரு பாடத்தித்திற்கான பொதுக் கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் விதிமுறைகள் ஆகியவற்றை அச்சிட்டு அந்தந்தப் பல்கலைக்கழகங்களில் கிடைப்பதற்கான வகை செய்தல்.

viii. 2017 ஆம் கல்வி ஆண்டிற்கு முன்னதாக பொதுப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான பரஸ்பரமாக முடிவு செய்யப்பட்ட கால அளவைத் தீர்மானித்தல் (ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ள புத்தகங்கள், சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்தில் கொள்ளுதல்)

ix. பொதுப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலுள்ள முன்னேற்றத்தை அவ்வப்போது ஆய்வு செய்து நிலைக்குழுவுக்கு அறிக்கை அளித்தல்.

x. மேற்குறிப்பிட்ட திட்டப்பணிகளை தொடக்கநிலையில் தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ரூ.5.00 கோடி மதிப்பில் தேவைக்கேற்ப திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும். மேலும், தொடர்ந்து இத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும்

தொடர் செலவினங்களை, உயர்கல்வியின்கீழ் உள்ள பல்கலைக்கழகங்கள் கூட்டாக இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

3) தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகப் பதிவாளரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, உயர்கல்வித்துறையின் கீழ் செயல்படும் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் தொலைநிலை கல்விமுறை படிப்புகளுக்கு, ஒரே வகையான தரமான பாடத்திட்டங்களை தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தால் உருவாக்குவதற்கு, மேலே பத்தி 2–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்கு அரசின் ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4) இவ்வழிகாட்டு நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ளவற்றினை செயல்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழக பதிவாளர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனீல்பாலீவால்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பதிவாளர்,
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,
பதிவாளர்கள்,
அனைத்து பல்கலைக்கழகங்கள் (உயர்கல்வித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளவை)
உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம், சென்னை–5.
நகல்
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சரின்சிறப்பு நேர்முக உதவியாளர்,
உயர்கல்வித்துறை முதன்மைச்செயலரின் தனிசெயலர்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/4/2017
பிரிவு அலுவலர்.

17/4/17